மாணவிக்கு பாலியல் வன்கொடுமை

சிபிஐ விசாரணை தேவை

சென்னை, டிச.26: அண்ணா பல்கலை. வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்குள்ளான வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை: அண்ணா பல்கலை. வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்குள்ளான சம்பவத்தில், மாணவியின் தனிப்பட்ட விவரங்களுடன் முதல் தகவல் அறிக்கை இணையத்தில் காவல்துறை எப்படி வெளியிட்டது? பாதிக்கப்பட்டவரின் பெயரை வெளியிடக்கூடாது என்ற அடிப்படைகூட திமுக அரசின் காவல்துறைக்குத் தெரியாதா?

இந்த சம்பவத்தில் கைதான ஞானசேகரன் திமுக உறுப்பினரே இல்லை என்று அமைச்சர் ரகுபதி பேட்டியளித்துள்ள நிலையில், அவர் திமுகவின் பகுதி துணை அமைப்பாளர் பொறுப்பில் உள்ளதற்கான பல ஆதாரங்கள் சமூக வலைதளங்களில் வலம் வருகின்றன. மேலும், கைது செய்யப்பட்ட ஞானசேகரன், இரவே விடுவிக்கப்பட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வருகின்றன. இவ்வளவு முக்கியமான வழக்கின் குற்றவாளியை எதற்கு காவல் துறை விடுவிக்க முயற்சித்தது? ஆளும் கட்சியான திமுகவில் ஞானசேகரன் பொறுப்பில் இருந்ததை இத்துடன் பொருத்திப் பார்த்தால், இவ்வழக்கில் அரசியல் அழுத்தம் இருப்பதற்கான சந்தேகம் மேலும் வலுக்கிறது.

முதல் தகவல் அறிக்கையில் ஞானசேகரனுடன் இன்னொரு நபருக்கும் சம்பவத்தில் தொடர்பு உள்ளது தெரியவந்துள்ளது. யார்அந்த நபர்? யாரைக் காப்பாற்ற திமுக அரசு முயற்சிக்கிறது? இனி இந்த வழக்கை திமுக அரசின் காவல்துறை விசாரிப்பதற்கு தார்மிக தகுதியில்லை.

எந்தவித அரசியல் இடையூறும் இன்றி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்க, இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பாஜகவினர் கைது

சென்னை,டிச.26: அண்ணா பல்கலை.வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அக்கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோரை போலீஸார் கைது செய்தனர்.

வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் முன்னாள் ஆளுநரும்,பாஜக மூத்த தலைவருமான தமிழிசை சௌந்தரராஜன், கரு.நாகராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாக அனைவரையும் போலீஸார் கைது செய்தனர்.

தமிழிசை சௌந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. சட்டம்-ஒழுங்குசீர்கெட்டுள்ளது.இதைக்கண்டித்து போராட்டம் நடத்தக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய வேண்டும்என்றார் அவர். கைதான அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

எல்.முருகன்–அண்ணாமலை கண்டனம்: பாஜகவினர் கைது செய்யப்பட்டதற்கு மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எல்.முருகன்: அண்ணா பல்கலை. மாணவி பாலியல் தாக்குதலுக்கு உள்ளானதற்கு நீதி கேட்டு தமிழக பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சியினர் கைது செய்யப்பட்டது கண்டனத்துக்குரியது. பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு கைதான நபர் திமுகவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் தகவல் அதிர்ச்சியை அளிக்கிறது. பாதிக்கப்பட்ட மாணவி குறித்த விவரம் அடங்கிய முதல் தகவல் அறிக்கையை பொது வெளியில் கசிய விட்டது கண்டிக்கத்தக்க குற்றம்.

கே.அண்ணாமலை: போராட்டம் நடத்தச் சென்ற முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட பாஜகவினரை வலுக்கட்டாயமாக காவல்துறை கைது செய்தது கண்டனத்துக்குரியது. முதல் தகவல் அறிக்கை கசிய விடப்பட்டது தனிமனித உரிமைகளுக்கு எதிரானது மட்டுமன்றி,சட்டவிரோதச் செயல்பாடும் ஆகும்.

பல்கலை.களில் மாணவிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

விழுப்புரம்,டிச.26: தமிழகத்தில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மாணவிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தினார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டி:

வேங்கைவயல் சம்பவம் நிகழ்ந்து 2 ஆண்டுகளாகியும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இந்த வழக்கை சிபிஐ வசம் தமிழக அரசு ஒப்படைக்க வேண்டும்.

வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 2 ஆண்டுகளாகியும், இன்னமும் பரிந்துரை அறிக்கை வழங்கவில்லை. அந்த ஆணையத்திடமிருந்து பரிந்துரை அறிக்கைகளைப் பெற்று, ஜன. 6–ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அண்ணா பல்கலை. வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்குள்ளான சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா என்பதைக் கண்டறிந்து, அவர்களையும் கைது செய்ய வேண்டும். மாநிலத்தில் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் மாணவிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை முழுமையாகக் கைவிட வேண்டும். இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் மக்களுக்கு துரோகம் செய்து விட்டன என்றார் ராமதாஸ்.

திமுகவை ஆட்சியிலிருந்து அகற்றும் வரை காலணி அணிய மாட்டேன்

கோவை, டிச. 26: திமுகவை ஆட்சியிலிருந்து அகற்றும் வரை காலணி அணிய மாட்டேன் என்று பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்தார்.

அவர் கோவையில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

அண்ணா பல்கலை. வளாகத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்வு. இந்த சம்பவத்தில் கைதான நபர் அமைச்சர்களுடன் தொடர்பில் இருந்துள்ளார்.

குற்றஞ் சாட்டப்பட்ட நபர் திமுகவில் இருந்ததால்தான் காவல் துறையின் நடவடிக்கை மெத்தனமாக உள்ளது.

திமுக அரசைக் கண்டித்து டிச. 27 (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு கோவையில் உள்ள என் வீட்டின் அருகே எனக்கு நானே சாட்டையால் அடித்துக் கொள்ளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளேன்.

பெண்களுக்கு பாதுகாப்பு வழங்காத திமுக அரசைக் கண்டித்து பாஜகவினர், தங்கள் வீடுகளின் முன் நின்று வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்துவர்.

48 நாள்களுக்கு விரதம் இருந்து, முருகனின் அறுபடை வீடுகளையும் தரிசனம் செய்து திமுகவுக்கு எதிரான அரசியலை மிகத் தீவிரமாக முன்னெடுக்க உள்ளோம். திமுக அரசை ஆட்சியில் இருந்து அகற்றும் வரை காலணி அணிய மாட்டேன் என்றார்.

செய்தியாளர்கள் சந்திப்பைத் தொடர்ந்து, அண்ணாமலை தான் அணிந்திருந்த காலணியை கழற்றிவிட்டார்.

மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான நபர் திமுக உறுப்பினர் அல்ல

சென்னை, டிச. 26: அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான நபர் திமுக உறுப்பினர் இல்லை என்று சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறினார்.

இதுகுறித்து அவர் திமுகதலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை அளித்த பேட்டி:

ஞானசேகரன் என்பவர் பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்குக் காரணமானவராக கண்டறியப்பட்டு இருக்கிறார். புகார் கொடுத்து ஐந்து மணி நேரத்துக்குள் குற்றவாளி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். காவல் துறை உரிய நடவடிக்கையை உடனடியாக எடுத்துவிட்டது. இந்த சம்பவத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் முதல்வருக்கோ, திமுக அரசுக்கோ சிறிதளவும் கிடையாது. கைது செய்யப்பட்டுள்ள நபர் திமுகவின் அடிப்படை உறுப்பினர்கூட கிடையாது.

எந்தத்தொடர்புமில்லை: பத்திரிகை மற்றும் ஊடகங்களில் கைது செய்யப்பட்ட நபர் துணை முதல்வருடன் இருப்பது போன்று புகைப்படம்வெளியிடப்பட்டுள்ளது. துணை முதல்வருக்கும் அந்த நபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அமைச்சர் மா. சுப்பிரமணியனுடன் இருக்கும் புகைப்படமும் வெளியாகியுள்ளது. சைதாப்பேட்டைப் பகுதியை சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையில், பல நலத்திட்டங்களை வழங்க அமைச்சர் அந்த பகுதிகளுக்குச் சென்றுள்ளார். அப்படி ஒரு நிகழ்வில் அமைச்சருடன் அருகில் நின்று கைது செய்யப்பட்டவர் போட்டோ எடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஞானசேகரனுக்கும் திமுகவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த வழக்கை மூடி மறைக்காமல் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் வேண்டாம்: அவருக்கு திமுக அரசு தண்டனை வாங்கி கொடுப்பதில் உறுதியாக உள்ளது. தற்போதைய நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா என்பது விசாரணையில்தான் தெரிய வரும்.

விரைவில் நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்படும். இந்த சம்பவம் தொடர்பாக எதுவும் தகவல் தெரிந்தால் அங்கு வந்து சொல்லலாம். ஆனால் இதை வைத்து அரசியல் ஆக்க பார்த்தார்கள் என்றால் அது நடக்காது. இது ஒன்றும் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம் போன்றது அல்ல. அன்று ஒரு முக்கிய பிரமுகரின் மகனே அந்த சம்பவத்தில் ஈடுபட்டிருந்தார். அதனால் ஆட்சியாளர்களே அதனை மூடி மறைக்க முயற்சி செய்தனர் என்று அமைச்சர் எஸ்.ரகுபதி கூறினார்.

CLASSIFIEDS

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்)
VILLUPURAM SINCE 2016
TNPSC
Gr IV, VAO 2025
Gr II, IIA Prelims
ஒரே கட்டணத்தில் பயிற்சி
DAILY / WEEKEND CLASS & TEST BATCH
TEST BATCH START ON 01.01.2025, WEDNESDAY - 10.30 AM
அட்மிஷன் நடைபெறுகிறது
Join with us through Telegram @ Targetteams Villupuram
323A, காமராஜர் சாலை, விழுப்புரம். (ஸ்ரீ கணேஷ் ஜீவல்லரி மாடியில்)
76390 00355
90257 50311

தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —
அறிவிப்பு – உடன் – சேர்க்கை - திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ("நிதி") திட்டங்களுக்கான அறிக்கை

பொருள்: சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் சுந்தரம் டிவிடெண்ட் ஈல்ட் ஃபண்டின் அடிப்படை பண்புகளில் மாற்றம்

சுந்தரம் டிரஸ்டீ கம்பெனி லிமிடெட் ('அறங்காவலர் நிறுவனம்') சுந்தரம் டிவிடெண்ட் ஈல்ட் ஃபண்டின் ('திட்டம்') அடிப்படை பண்புகளில் பின்வரும் மாற்றங்களை செபி வழங்கிய "ஆட்சேபனை இல்லை" கடிதத்திற்குப் பின் ஒப்புதல் அளித்துள்ளது என்பதை முதலீட்டாளர்கள் / யூனிட்ஹோல்டர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதன் கடிதம் எண். SEBI/HO/IMD/IMD-RAC-2/P/OW/2024/0000038760/1 தேதி 16/12/2024. மின்வரும் மாற்றம்(கள்) 29/01/2025 முதல் அமலுக்கு வரும்.

விவரங்கள்	தற்போதுள்ள திட்ட அம்சங்கள்		முன்மொழியப்பட்ட திட்ட அம்சங்கள்	
சொத்து ஒதுக்கீடு முறை*	அதிக ஈவுத்தொகை ஈட்டும் நிறுவனங்களின் ஈக்விட்டி மற்றும் ஈக்விட்டி தொடர்பான இன்ஸ்ட்ருமென்ட்ஸ்#	65-100%	அதிக ஈவுத்தொகை வழங்கும் நிறுவனங்களின் ஈக்விட்டி மற்றும் ஈக்விட்டி தொடர்பான பத்திரங்கள்#	65-100%
	கடன் மற்றும் பணச் சந்தை இன்ஸ்ட்ருமென்ட்ஸ் (கடன்/ லிக்யுட் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள் மற்றும் பணத்தின் யுனிட்கள் உட்பட)	0-35%	கடன் மற்றும் பணச் சந்தை இன்ஸ்ட்ருமென்ட்ஸ் (கடன்/ லிக்யுட் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள் மற்றும் பணத்தின் யுனிட்கள் உட்பட)	0-35%
	# அதிக ஈவுத்தொகை மகசூல் நிறுவனங்கள், முதலீட்டு நேரத்தில், நிஃப்டி டிவிடெண்ட் வாய்ப்புகள் 50 குறியீட்டில், முந்தைய வர்த்தக நாள், மிகக் குறைந்த டிவிடெண்ட் ஈவுத்தொகைக் கொண்ட நிறுவனத்தின் ஈவுத்தொகை ஈட்டிற்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் நிறுவனங்களாக வரையறுக்கப் படுகின்றன.	REITகள்/InvITகளின் யுனிட்கள் முதலீடு	0-10%	# அதிக ஈவுத்தொகை மகசூல் நிறுவனங்கள், முதலீட்டு நேரத்தில், நிஃப்டி டிவிடெண்ட் வாய்ப்புகள் 50 குறியீட்டில், மிகக் குறைந்த டிவிடெண்ட் ஈவுத்தொகைக் கொண்ட நிறுவனத்தின் ஈவுத்தொகை ஈட்டிற்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் நிறுவனங்களாக வரையறுக்கப் படுகின்றன. முந்தைய வர்த்தக நாள்.
	SEBI (மியூச்சுவல் ஃபண்டுகள்) விதிமுறைகள், 1996 மூலம் அவ்வப்போது அனுமதிக்கப்படும் நோக்கங்களுக்காக வழித்தோன்றல்களைப் பயன்படுத்த இந்தத் திட்டம் விரும்புகிறது.		SEBI (மியூச்சுவல் ஃபண்டுகள்) விதிமுறைகள், 1996 மூலம் அவ்வப்போது அனுமதிக்கப்படும் நோக்கங்களுக்காக வழித்தோன்றல்களைப் பயன்படுத்த இந்தத் திட்டம் விரும்புகிறது.	
	திட்டமானது போர்ட்ஃபோலியோவின் அதிகபட்ச நிகர வழித்தோன்றல் நிலையை 50% வரை கொண்டிருக்கும்.		இந்தத் திட்டமானது போர்ட்ஃபோலியோவில் 50% வரை அதிகபட்ச நிகர வழித்தோன்றல் நிலையைக் கொண்டிருக்கும்.	

* அடிப்படை பண்பு மாற்றமாக கருதப்படுகிறது

REITகள் மற்றும் அழைப்புகளில் முதலீடுகளுடன் தொடர்புடைய ஆபத்துக் காரணிகள்:

வட்டி-விகித ஆபத்து: REITகள் & InvITகள் வட்டி விகித அபாயத்தைக் கொண்டுள்ளன. பொதுவாக, வட்டி விகிதங்கள் உயரும் போது, ஏற்கனவே உள்ள பத்திரங்களின் விலைகள் குறையும் மற்றும் வட்டி விகிதங்கள் குறையும் போது, அத்தகைய விலைகள் அதிகரிக்கும். விலைகளின் வீழ்ச்சி அல்லது உயர்வின் அளவு, தற்போதுள்ள சுப்பனின் செயல்பாடு, முதிர்வுக்கான நாட்கள் மற்றும் வட்டி விகிதங்களின் அளவு அதிகரிப்பு அல்லது குறைதல் ஆகும்.

எதிர்பார்த்ததை விட குறைவான விநியோகத்தின் ஆபத்து: REIT அல்லது InvIT வழங்கும் விநியோகங்கள், விநியோகத்திற்காக கிடைக்கும் நிகர பணப்புழக்கங்களின் அடிப்படையில் இருக்கும். விநியோகத்திற்காகக் கிடைக்கும் பணத்தின் அளவு முக்கியமாக REIT/INVIT ஈவுத்தொகையாகப் பெறும் பணத்தின் அளவு அல்லது போர்ட்ஃபோலியோ சொத்துக்களிலிருந்து வட்டி மற்றும் அசல் கொடுப்பனவுகளைப் பொறுத்தது. செயல்பாடுகளிலிருந்து போர்ட்ஃபோலியோ சொத்துக்களால் உருவாக்கப்படும் பணப்புழக்கங்கள் மற்றவற்றின் அடிப்படையில் ஏற்ற இறக்கமாக இருக்கலாம்:

- குத்தகைதாரர்கள் மற்றும் வெளியேறுபவர்களின் வெற்றி மற்றும் பொருளாதார நம்பகத்தன்மை.
- போர்ட்ஃபோலியோ சொத்துக்களின் மதிப்பீடுகள், வருமானம் மற்றும் லாபத்தை எதிர்மறையாக பாதிக்கக்கூடிய பொருளாதார சுழற்சிகள் மற்றும் வணிகத்தில் உள்ளார்ந்த அபாயங்கள்.
- கடன் சேவை தேவைகள் மற்றும் போர்ட்ஃபோலியோ சொத்துகளின் பிற பொறுப்புகள் மற்றும் செயல்பாட்டு மூலதன தேவைகளில் ஏற்ற இறக்கங்கள்.
- போர்ட்ஃபோலியோ சொத்துக்களின் நிதியை கடன் வாங்குவதற்கும் மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கும் திறன்.
- போர்ட்ஃபோலியோ சொத்துக்களின் மூலதனச் செலவினங்களின் அளவு மற்றும் நேரம்.

மணப்புழக்கம் ஆபத்து: இது REIT/InvIT யூனிட்களை எளிதாக விற்கக்கூடியதைக் குறிக்கிறது. செயலில் உள்ள இரண்டாம் நிலை சந்தை உருவாகும் அல்லது பராமரிக்கப்படும் எனபதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே யூனிட்களில் வர்த்தகம் எப்போதாவது நடக்கும் போது நேரம் இருக்கும். திரவச் சந்தை இருக்கும் ஒப்பிடக்கூடிய பத்திரங்களின் சந்தை விலையில் இருந்து ஒரு தள்ளுபடியைப் பிரதிபலிக்கும் திரவ அலகுகளின் அடுத்தடுத்த மதிப்பீடு.

விலை ஆபத்து: REIT/InvIT அலகுகளின் மதிப்பீடு பொருளாதார நிலைமைகள், REIT/InvIT செயல்படும் சந்தைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் (எ.கா. ரியல் எஸ்டேட்) ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்ற இறக்கமாக இருக்கலாம். போர்ட்ஃபோலியோ சொத்துக்களின் மறைமுகப் பங்குதாரராக, யூனிட் ஹோல்டர்களின் உரிமைகள் கடனாளிகள், கடன் வைத்திருப்பவர்கள் மற்றும் இந்தியச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிற தரப்பினரின் உரிமைகளுக்குக் கீழ்ப்படுத்தப்படும், ஏதேனும் போர்ட்ஃபோலியோ சொத்துக்கள் திவால் அல்லது கலைக்கப்பட்டால்.

மேலே உள்ளவை REITகள் மற்றும் அழைப்பிதழ்களில் முதலீடுகளுடன் தொடர்புடைய சில பொதுவான அபாயங்கள். ஒரு திட்டத்தின் முதலீட்டு நோக்கங்கள் அடையப்படும் அல்லது மூலதன இழப்பு ஏற்படாது என்பதற்கான எந்த உறுதியும் இருக்க முடியாது. முதலீட்டு முடிவுகள் மாதாந்திர, காலாண்டு அல்லது வருடாந்திர அடிப்படையில் கணிசமாக வேறுபடலாம்.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டவை தவிர திட்டத்தின் மற்ற அனைத்து அம்சங்களும் மாறாமல் இருக்கும்.

செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா (மியூச்சுவல் ஃபண்ட்ஸ்) விதிமுறைகள், 1996 இன் படி, முதலீட்டு நோக்கத்தில் ஏதேனும் மாற்றம், திட்டத்தின் சொத்து ஒதுக்கீடு ஆகியவை திட்டத்தின் அடிப்படை பண்புகளில் ஏற்படும் மாற்றத்திற்கு சமம். அதன்படி, மேற்கூறிய ஒழுங்குமுறையின் விதிமுறை 18(15A) இன் படி, ஒரு முதலீட்டாளர் அந்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு யூனிட்களை தொடர்ந்து வைத்திருக்க விரும்பவில்லை என்றால், அவர் / அவள் / அது நடைமுறையில் உள்ள திட்டத்திலிருந்து வெளியேற விருப்பம் இருக்கும் NAV, வெளியேறும் சுமை இல்லாமல். வெளியேறும் விருப்பத்தை 30/12/2024 முதல் 28/01/2025 வரை (பிற்பகல் 3 மணி வரை) (இரு நாட்களும் சேர்த்து) பெறலாம். மேற்கூறிய வெளியேறும் விருப்பம் 27/12/2024 அன்று திட்டத்தின் அனைத்து முதலீட்டாளர்களுக்கும் கிடைக்கும். 28/01/2025 குப் பிறகு பெறப்பட்ட அனைத்து பரிவர்த்தனை கோரிக்கைகளும் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த திட்டத்தில் நிலவும் வெளியேறும் சுமைக்கு ஏற்பட்டது. வெளியேறுவதற்கான சலுகை ஒரு விருப்பத்தேர்வு மற்றும் கட்டாயம் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளலாம். AMC அல்லது KFIN டெக்னாலஜிஸ் சேவை மையங்களின் எந்த அலுவலகத்திலும் மீட்புக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும். யூனிட்கள் அடகு வைக்கப்பட்டுள்ள யூனிட் ஹோல்டர்களுக்கு, அத்தகைய வெளியேறும் விருப்பம் கிடைக்காது மற்றும் மியூச்சுவல் ஃபண்ட் அத்தகைய யூனிட்களுக்கு ஒரு உரிமையைக் குறிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது மற்றும் உறுதிமொழியின் வெளியீடு பெறப்படவில்லை மற்றும் மீட்பிற்கு விண்ணப்பிப்பதற்கு முன் மியூச்சுவல் ஃபண்டிற்கு சரியான முறையில் தெரிவிக்கப்பட்டது, தங்கள் வெளியேறும் விருப்பத்தைப் பயன்படுத்தத் தேர்வுசெய்யும் யூனிட் ஹோல்டர்களுக்கு செல்லுபடியாகும். மீட்புக் கோரிக்கையைப் பெற்ற 3 (மூன்று) வணிக நாட்களுக்குள் மீட்பின் வருமானம் அனுப்பப்படும். யூனிட்ஹோல்டர்கள் தங்களுக்குத் தேவைப்படும் முகவரி அல்லது பேஅவுட் வங்கி விவரங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால், வெளியேறும் விருப்பத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு AMC உடன் புதுப்பிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

வெளியேறும் காலத்தின் போது, கூறப்பட்ட திட்டத்தில் இருந்து யூனிட்களை மீட்டெடுப்பது / மாற்றுவது, NRI யூனிட் வைத்திருப்பவரின் கைகளில் மூலதன ஆதாயத்தை ஏற்படுத்தலாம், மேலும் மூலதன ஆதாயத்தின் அடிப்படையில் அத்தகைய TDS பொருந்தக்கூடிய வரிச் சட்டங்களின்படி கழிக்கப்படும். வெளியேறும் விருப்பத்தைப் பயன்படுத்துதல், அத்தகைய NRI முதலீட்டாளர்களால் மட்டுமே ஏற்கப்பட வேண்டும். கூறப்பட்ட திட்டத்தில் இருந்து யூனிட்களை மீட்டெடுப்பது / மாற்றுவது பத்திர பரிவர்த்தனை வரி (STT) கழிக்கப்படுவதற்கு பொறுப்பாகும்; இருப்பினும், அத்தகைய STT AMC ஆல் ஏற்கப்படும் மற்றும் முதலீட்டாளரால் சுமக்கப்படாது.

வரி தாக்கங்களின் தனிப்பட்ட தன்மையைக் கருத்தில் கொண்டு, யூனிட் ஹோல்டர்கள் தங்கள் வரி ஆலோசகர்களைக் கலந்தாலோசிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். யூனிட்கள் டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட வடிவத்தில் இருந்தால், முதலீட்டாளர்கள் தங்கள் பரிவர்த்தனைகளுக்கு தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூறப்பட்ட வெளியேறும் சாளர காலத்தில் வெளியேறும் விருப்பத்தை பயன்படுத்தாத யூனிட்ஹோல்டர்கள் முன்மொழியப்பட்ட மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்ததாக கருதப்படும். யூனிட்ஹோல்டர்கள் மேற்கூறிய மாற்றங்களுடன் உடன்படும் பட்சத்தில் எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளலாம், இது முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்கு அவரதாலால் வழங்கப்பட்ட ஒப்புதலாகக் கருதப்படும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்கூறிய திட்டங்களின் SID, KIM மற்றும் SAI ஆகியவற்றில் தொடர்புடைய மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

திட்டத் தகவல் ஆவணம் (கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை (கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் (SAI) அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

இடம்: சென்னை
தேதி: டிசம்பர் 27, 2024

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்,
நிறுவனத்தின் செயலாளர் & கம்பிளையன்ஸ் அதிகாரி

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615
கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்ட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்
தமிழ்நாடு லிமிடெட், சென்னை – 2
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான திண்டிவனம் உபபணிமனையில் 11000 சதுரஅடி கொண்ட இடம் ஆகியவை வணிக உபயோகத்திற்காக மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து Online, e–Tender மூலம் வரவேற்கப்படுகிறது.
உரிமக்காலம், விண்ணப்பிக்கும் முறை, செலுத்த வேண்டிய முன்வைப்புத்தொகை மற்றும் இதர விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.
செ.எ.தொ.இ./5655/ஒப்பந்தப்புள்ளி/2024 மேலாண் இயக்குநர்

தமிழ்நாடு அரசு
திருவள்ளூர் நகராட்சி
மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.702/2022/இ2 நாள். 24.12.2024
Form of contract: Item rate (Two Cover System)
1. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி பகுதியில் மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021 - 22-கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.1048.82 இலட்சத்தில் கழிவீரி சுத்திகரிப்பு நிலையத்தில் மண் உயிரி தொழில் நுட்ப (SBT) அடிப்படையில் மேம்பாடு செய்தல் பணி மற்றும் கழிவீரி சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கூவம் ஆற்று பகுதியில் புட்லூர் தடுப்பணைவரை சுத்திகரிக்கப்பட்ட நீரை வெளியேற்ற குழாய் அமைக்கும் பணி (Treated Sewage Water disposing after the Check dam in Coovam river) மேற்கொள்வதற்கு அரசு துறைகளில் பதிவு பெற்ற வகுப்பு I தகுதியுடைய ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
2. ஒப்பந்த படிவங்கள் 24.12.2024, செவ்வாய் கிழமை முதல் http://tntenders.gov.in இணைய தளங்களிலிருந்து இ